## கருத்தரங்கு மற்றும் பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்

**(2014 / 2015 கல்வியாண்டில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்குப் பதிவு செய்த மாணவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்)**

---

### (A) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் பரீட்சையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.
   (உ-ம்:
   Year 1, Semester I Examination in Bachelor of Arts (BA)
   Year 1, Semester I Examination in Bachelor of Business Administration (BBA)
   Year 1, Semester I Examination in Bachelor of Commerce (BCom)

2. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிவாரி அபேட்சகருக்கான குறிப்புப் புத்தகத்தில் காணப்படும் தங்களது பதிவு இலக்கத்தை உரிய குறியீட்டு எழுத்துடன் சரியாகக் குறிப்பிடவும். (உ-ம்: SEU/ES/15/AT/0045)
   - முதலெழுத்துக்களுடன் பெயரை எழுதவும் (உ-ம்: M.S. Sifan)
   - முழுப் பெயரை முறையாக சொற்களைப் பிரித்து எழுதவும் (உ-ம்: Mohamed Saleem Sifan)

3. தங்களது சரியான விலாசத்தையும், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் இரண்டையும், மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிடவும்.

4. பாடத்தின் சரியான குறியீட்டையும் பாட அலகுகளையும் குறிப்பிடவும். விபரம் பின்வருமாறு:

**Degree: Bachelor of Arts (BA)**

| Subject Code | Title | Remarks |
|---|---|---|
| ELC 11012 | Elementary English I (F) | All course units are compulsory |
| ICT 11012 | Information Technology I (F) | |
| PSH 11012 | Peace and Social Harmony I (F) | |
| PHM 11013 | Problems of Philosophy | A candidate has to choose any three course units of these seven |
| ECM 11013 | Introductory Micro Economics | |
| ENM 11013 | Introduction to Literature and Literary Appreciation | |
| GEM 11013 | Fundamental of Physical Geography | |
| PSM 11013 | Introduction to Politics - I Political Ideas | |
| SOM 11013 | Introduction to Sociology and Social Anthropology | |
| TMM 11013 | Introduction to Tamil Literature and Literary Appreciation | |

**Degree: Bachelor of Business Administration (BBA)**

| Subject Code | Title | Remarks |
|---|---|---|
| BBA 11012 | General English - I | All course units are compulsory |
| BBA 11022 | Information Communication Technology | |
| BBA 11033 | Principles of Management | |
| BBA 11043 | Micro Economics | |
| BBA 11052 | Fundamental of Business Mathematics | |
| | | |
| BBA 11062 | Soft Skill and Career Development | A candidate has to choose one of two |
| or | | |
| BBA 11072 | Psychology for Life | |

**Degree: Bachelor of Commerce (BCom)**

| Subject Code | Title | Remarks |
|---|---|---|
| BCOM 11012 | Basic Computer Applications | All course units are compulsory |
| BCOM 11022 | Business English | |
| BCOM 11032 | Business Mathematics | |
| BCOM 11043 | Tourism Management | |
| BCOM 11053 | Principles of Management | |
| BCOM 11062 | Financial Accounting | |

5. கலைமாணிப் பரீட்சைகள் யாவும் தமிழ் மொழியிலேயே நடைபெறும். வியாபார நிர்வாகமாணி மற்றும் வணிகமாணி பரீட்சைகள் தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் ஏதாவதொரு மொழியினை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும். இதன் பின்னர் எக்காரணத்திற்காகவும் மொழி மாற்றம் செய்யப்படமாட்டாது என்பதைக் கவனத்திற்கொள்க.

6. கருத்தரங்குகள் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்), மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெறும். விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கருத்தரங்கு நிலையங்கள் மாறுபடும். வணிகமாணி கற்கைநெறிக்கான கருத்தரங்குகள் யாவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே நடைபெறும். மாணவர்கள் தங்களது வசதியினைப் பொறுத்து 1, 2, 3 என முன்னிலைப்படுத்தி இலக்கமிடுவதன் மூலம் வசதியான மாவட்டத்தினைத் தெரிவு செய்து கொள்ளவும்.

7. கட்டணங்கள்: கட்டணங்களைச் செலுத்தி உரிய விபரங்களைக் குறிப்பிடவும்

- கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு ரூபா. 7,500.00 உம் வியாபார நிர்வாகமாணி மற்றும் வணிகமாணிக்கு 17,500.00 உம் செலுத்தப்பட வேண்டும். முதலாம் வருட முதலாம் பருவ கற்கைநெறிக் கையேடு, கருத்தரங்கு, பரீட்சை போன்றவற்றுக்கான சகல கட்டணங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.
- கட்டணங்கள் யாவும் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற உறுதிச்சீட்டு (PIV) மூலமே எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் செலுத்தப் படவேண்டும். வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட PIV University Copy ஐ பரீட்சை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதபடி ஒட்டவும். வங்கிப் பற்றுச் சீட்டினை தங்களுடன் வைத்திருப்பது நன்று)

வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்த பின்பு உரிய இடத்தில் கையொப்பமிடவும்.

## (B) வேறு அறிவுறுத்தல்கள்

1. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் அல்லது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

- குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு (PIV University Copy)
- தங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி இடது பக்க மேல் மூலையில் பதிவு இலக்கத்தினையும் பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஆண்டினையும் எழுதி ரூபா 40.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9''x4'' அளவிலான இரண்டு தபாலுறைகள்
- அண்மையில் எடுக்கப்பட்ட தங்களது நிழற்பிரதி (Photo) ஒன்றினை விண்ணப்பத்தின் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ள பெட்டியினுள் ஒட்டுதல் வேண்டும். அதன் கீழுள்ள சிறிய பெட்டியினுள் தங்களது ஒப்பத்தினை தெளிவாக இடல் வேண்டும்.

3. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தோற்றும் பரீட்சையின் பெயரையும் வெளிவாரி அபேட்சக பதிவு இலகத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

4. பூரணப்படுத்தப்பட்ட கருத்தரங்கு, பரீட்சை விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு எதிர்வரும் **30.05.2016ஆம்** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பலாம்.:

   Assistant Registrar,
   Centre for External Degrees & Professional Learning (CEDPL),
   South Eastern University of Sri Lanka,
   Oluvil # 32360

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மாறாக அல்லது குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யப்படாத அல்லது தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு உரிய நேரத்தில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். அத்துடன் கருத்தரங்கு சம்பந்தமான அறிவுறுத்தல்களும் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

7. பரீட்சைக்கு விண்ணப்பித்ததன் பின்பு பரீட்சையிலிருந்து விலகிக்கொள்ளும் பரீட்சார்த்திகள் தமது விலகல் மனுவினை எதிர்வரும் 30.06.2016ஆம் திகதி அல்லது முன்னர் வெளிவாரி பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் (CEDPL) கிடைக்கச் செய்தால் தாம் செலுத்திய பரீட்சைக்கட்டணத்தில் 75% இனை மீளப்பெற்றுக்கொள்ள முடியும். இத்திகதியின் பின்னரான விலகல் மனுக்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு : 0672052801
இணையத்தள முகவரி : www.seu.ac.lk

உதவிப் பதிவாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
03.05.2016